தினகரன் கோவை 20-5-2009 5

## கல்வி நிறுவனங்களில்

# அருந்ததியர்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு

## அமலுக்கு வந்தது

சென்னை, மே.20-

அரசு கல்வி நிறுவனங்களிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் அருந்ததியர்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு செய்து தமிழக அரசு சட்டம் நிறைவேற்றி உள்ளது. அது கடந்த ஏப்ரல் மாதம் 29-ந்தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

அதன்படி ஆதிதிராவிடர்களுக்கு (எஸ்.சி.) 18 சதவீதம் ஒதுக்கப்பட்டதில் உள்ஒதுக்கீடாக 16 சதவீதம் அருந்ததியர்கள், சக்கிலியர்கள், மதாரி, பகடை, மடிகா, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரா ஆகிய இனத்தைசேர்ந்தவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படும். உதாரணமாக ஒரு கல்வி நிறுவனத்தில் 100 இடங்கள் இருக்குமானால் அதில் 18 இடங்கள் எஸ்.சி. பிரிவினருக்கு ஒதுக்கப்படும். அந்த 18 இடங்களில் 2 இடங்கள் சக்கிலியர்கள் உள்ளிட்ட மேலே குறிப்பிட்ட இனத்தை சேர்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.அவ்வாறு கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரி பார்வையிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தல் ஆணையம் உங்கள் மீது வழக்கு போட்டால் அதை சந்திக்க தயாரா? என்று கேட்டார்.

இதற்கு பதில் அளித்து டாக்டர் ராமதாஸ், "தேர்தல் ஆணையத்திடம் நீங்கள் ஒரு மனு போடுங்கள்" என்று கோபமாக கூறிவிட்டு பேட்டியை முடித்துக்கொண்டார்.

பேட்டியின் போது பா.ம.க. மாநில தலைவர் ஜி.கே.மணி, நிர்வாகிகள் ஏ.கே.மூர்த்தி, கே.என்.சேகர், ஜெயராமன் ஆகியோர் உடன் இருந்தனர்.


இலவச சிகிட்சை வாய்ப்பு

கருணா மருத்துவ கல்லூரி மருத்துவமனை

விளையோடி - சித்தூர் - பாலக்காடு

தொலைபேசி எண் : 04923 - 221791, 221792, 221793

பாலக்காடு S.D.A. அரசக்கட்டளையும் பாட்டிகுளம் அருகே செயல்பட்டுவரும் கருணாமருத்துவக்கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, வருமைக்கோட்டிற்கு கீழுள்ள ஏழை நோயாளிகளுக்கு இலவச மருத்துவச்சிகிட்சை தரவுள்ளது.

இலவச சிகிட்சை மற்றும் மருந்துக்காக அரசு அதிகாரிகள் அளித்த வருமான சான்றிதழ்களுடன் கருணா மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை அலுவலகத்தை அணுகி சிகிட்சை பெறலாம்.

இப்படிக்கு

P.P. உண்ணீன்குட்டி மௌலவி, செயலாளர்


# அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டம் அமல்

சென்னை, மே 20-

**ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீட்டில் அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு அளிக்கும் சட்டம் ஏப்ரல் 29ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது. அரசுப் பணிகள் மற்றும் அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் இந்த இடஒதுக்கீடு அமல்படுத்தப்படும்.**

அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர்களுக்கான 18 சதவீத இடஒதுக்கீட்டில் அருந்ததியின மக்களுக்கு சிறப்பு உள் ஒதுக்கீடு வழங்கும் சட்ட மசோதா கடந்த பிப்ரவரி மாதம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்துள்ளதால், ஏப்ரல் 29ம் தேதியில் இருந்து அமலுக்கு வந்துள்ளது.

இதற்காக அரசு பிறப்பித்துள்ள உத்தரவு:

தமிழ்நாடு அருந்ததியர்கள் சிறப்பு ஒதுக்கீடு விதிகள் 2009 என்று இந்த சட்டம் அழைக்கப்படும்.

ஆதிதிராவிடர்களுக்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள பட்டியலில், அருந்ததியர், சக்கிலியன், மதாரி, மடிகா, பகடை, தோட்டி, ஆதி ஆந்திரா ஆகிய இனத்தவர் இந்த சிறப்பு ஒதுக்கீட்டில் பயன் பெறுவர்.

இதன்படி, ஆதிதிராவிடர்களுக்கான 18 சதவீத இடஒதுக்கீட்டுக்குள் 16 சதவீதம் அருந்ததியினருக்கு, அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், அரசு பணிகளில் இடஒதுக்கீடு அளிக்கப்படும்.

மொத்தம் 100 இடங்கள் காலியிருந்தால், அதில் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படும் 18 இடங்களில், அருந்ததியினருக்கான இன சுழற்சி முறை 2, 32, 66 என்ற அடிப்படையில் அமையும்.

தனியார் கல்வி நிறுவனங்களில் இச்சட்டத்தில் உள்ளபடி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதை, அரசு உத்தரவுப்படி, சம்பந்தப்பட்ட அதிகாரி ஆய்வு செய்யலாம்.

அரசு கேட்ட தினத்தில் இருந்து, 30 நாட்களுக்குள் விசாரணை நடத்தி அறிக்கையை அதிகாரி சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரை, உரிய அதிகாரியாக நியமிக்கப்படுகிறார். அந்தந்த மாவட்டத்துக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் இவர் ஆய்வு செய்வார்.

இவ்வாறு ஆதிதிராவிடர் நலத் துறை செயலர் உத்தரவிட்டுள்ளார்.

தினமலர் - 20-5-2009
கோவை